கழக அரசு பொறுப்பேற்ற பிறகுதான் – கடந்த 4 ஆண்டுகளில் 4000– 5000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து

அனைத்துக் கல்லூரிகளின் பணிகள் முடிந்து திறந்து வைக்கப்படுகின்றன!

பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

சென்னை, மார்ச். 20-

விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேரவையில் அளித்த பதில் வருமாறு:

நேற்றைக்கு இது சம்பந்தமாக நான் விரிவாக இங்கே பதில் சொல்லி இருக்கிறேன். 1 கோடியே 47 இலட்சம் குடும்பங்கள் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள். பெருமதிப்பிற்குரிய மன்ற உறுப்பினர் இங்கே சொன்னதைப் போல அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் insurance Scheme-லே இருக்கிற முரண்பாடுகளை மட்டும் ஒரு இரண்டு நிமிடங்கள் சொல்கிறேன். Premium தொகை அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வெறும் ரூ.699/- இப்போது முதல்வர் அவர்கள் ரூ.849/- ஆக உயர்த்தி இருக்கிறார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- இப்போது ரூ.1,20,000/- ஆக உயர்த்தி இருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் காப்புறுதித் தொகை வெறும் ரூ.2 இலட்சம், நம்முடைய முதல்வர் அவர்கள் ரூ.5 இலட்சமாக உயர்த்தி இருக்கிறார்கள். சிகிச்சை முறைகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1450 மட்டும்தான். தற்போது 2053 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 970. தற்போது இரண்டு மடங்கு உயர்ந்து 2175. அவர் சொன்னார் அல்லவா, அந்த transplant, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த பிரத்யேக சிகிச்சை முறைகள் வெறும் 2, இப்போது 8. ரூ.22 இலட்சம் வரை insurance என்பது முதலமைச்சர் அவர்களுடைய அந்த வழிகாட்டுதலோடு தொடர்ச்சியாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக 8 உயர் அறுவை சிகிச்சைகள், எது எது என்று அவர்களுக்கும் தெரிந்திருக்கும். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, காதுவால் நரம்பு உள்வைப்பு அறுவை சிகிச்சை, stem cell மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, நுரையீரல் வால்வு மாற்று அறுவை சிகிச்சை, செவிப்புல மூளை தண்டு உள்வைப்பு அறுவை சிகிச்சை இவையெல்லாமே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டு கொண்டிருந்தது. ஆனால் இரண்டே மாற்று அறுவை சிகிச்சைகள் மட்டும்தான் கடந்த காலத்தில் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. எங்கேயோ மறுக்கப்படுகிறது என்று அவர் சொன்னார். அதுபோன்று மறுக்கப்படுகிற மருத்துவமனைகளின் பட்டியல் தந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதோடு மருத்துவக் கல்லூரிகள் பற்றியும் சொல்லி இருக்கிறார். ஏற்கெனவே, இதுசம்பந்தமாக நிறைய முறை நான் சொல்லி இருக்கிறேன். 2011இல் இதே அவையில் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான் இந்தியாவிற்கே வழிகாட்டும் ஒரு அமைப்பு ஒன்றை உருவாக்கினார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவக்கல்லூரி என்கின்ற மகத்தான திட்டத்தைக் கொண்டு வந்தவர் அவர்தான். இந்த 11 மருத்துவக்கல்லூரிகள் சம்பந்தமாக ஏற்கெனவே நிறைய முறை சொல்லி இருக்கிறோம். இந்த 11 மருத்துவக்கல்லூரிகளில் 6,7 மருத்துவக்கல்லூரிகள் AS-Administrative Sanction பெறப்பட்டது, இடங்கள் தேர்வு செய்யப்பட்டது எல்லாமே அப்போது தான். அந்த 11 மருத்துவக் கல்லூரிகளையும் நீங்கள் துவக்கி வைத்து விட்டுச் சென்றீர்களே தவிர, இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகுதான், கடந்த 4 ஆண்டுகளில் ஏறத்தாழ 4,000-5,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து, அனைத்துக் கல்லூரிகளின் பணிகளும் முடிவுற்று, தற்போது தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. அவற்றிலும் 10 மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகள் கடந்த 4 ஆண்டுகாலத்தில், தொடர்ச்சியாககட்டி முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளன. நாகப்பட்டினம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு தண்ணீர் வசதியே இல்லாத நிலையில் கல்லூரி கட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்தான் தற்போது அதற்கான வசதிகளைச் செய்து திறந்து வைத்தார்கள். அதேபோன்று, நாமக்கல் மாவட்டத்திலும், குடிநீர் வசதி சிறிதும் இல்லாத ஓர் இடத்தில் மருத்துவக் கல்லூரியும், மருத்துவமனையையும் உங்கள் ஆட்சியில் திட்டமிடப்பட்டு, இன்றைக்கு அதற்கான முழு செலவையும், கிட்டத்தட்ட ரூ.400 கோடி செலவு செய்யப்பட்டு, இன்றைக்கு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், கடைசியாக உதகை மருத்துவக் கல்லூரியும் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட உள்ளது. அனைத்துக் கட்டுமானப் பணிகளும் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், ஏறத்தாழ ரூ.300 கோடிக்கு மேலாக செலவு செய்து பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எனவே, மருத்துவக்கல்லூரிகள் அறிவிக்கப்பட்டவை உங்கள் ஆட்சியில்தான் என்றாலும், அறிவிக்கப்பட்ட அனைத்து மருத்துவக்கல்லூரிகளும் இன்றைக்கு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஒவ்வோராண்டிலும் ஒதுக்கிக் கொண்டிருக்கின்ற நிதி ஆதாரத்தினால்தான் என்பதை உறுப்பினர் அவர்களும் நன்றாக அறிவார்கள் என்பதையும் தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் பதிலளித்தார்.

குன்னூர் வி.பி. தெரு பகுதியில் அண்ணா பாரம் துக்கும் தொழிலாளர் தொழில் நல சங்கம் சார்பில் மத நல்லிணக்கத்தை முன்னிட்டு மூன்றாம் ஆண்டு நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு முன்னிலை வகித்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன், நகர செயலாளர் இராமசாமி, மாநில விளையாட்டு அணி துணை மு. வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர் க.செல்வம், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் செந்தில், வினோத், சந்திப், நகர மன்ற உறுப்பினர் ஜாஹிர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி

கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்திட வேண்டும்!

சட்டப்பேரவையில் – சபா.இராஜேந்திரன் கோரிக்கை!

சென்னை, மார்ச் 20-

பேரவையில் கேள்வி நேரத்தின் போது கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்று அமைத்திட வேண்டும் என்று சபா.இராஜேந்திரன் கோரிக்கை விடுத்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

சபா. இராசேந்திரன்: நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, திருவாமூர் ஊராட்சி, காமாட்சிப் பேட்டை கிராமத்தில் ஒரு தடுப்பணைக் கட்ட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். NLC நிறுவனத்தால் நிலத்தடிநீரும் குறைந்து கொண்டே வருகிறது, குடிதண்ணீரும் உப்பாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் சரிசெய்வதற்கு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியிலே, கெடிலம் ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணையைக் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன்: என்னுடைய இலாகாவின் பெரிய கோரிக்கையே தடுப்பணைதான். இப்போது வந்திருப்பதால் நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், வருகிற நிதிநிலை, என்னுடைய இலாகாவிற்கு ஒதுக்கப்படுகிற நிதியை வைத்துப் பார்த்தால் அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் கட்ட முடிகிறதே தவிர, எல்லா உறுப்பினர்களுடைய ஆசைகளையோ அல்லதுவிருப்பங்களையோ நிறைவேற்ற முடியவில்லை. எனவேதான் நான் சொன்னேன். சில நேரங்களில், நான் படிக்கும்போதே எங்கு தடுப்பணைக் கட்ட வேண்டுமென்று எனக்கு detail ஆகத் தெரியும். அதிலே சில இடங்களில் கட்ட வேண்டுமென்றாலும் நிதி நிலைமை சரியில்லை. ஆகையினால்தான் தென்னரசு அவர்களை உங்களுக்கு முன்னாலே நான் துணைக்கு அழைத்தேன். இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் ஒரு முறை நான் சொல்லியிருக்கிறேன். எல்லா உறுப்பினர்களும் அணை கட்டித்தர வேண்டுமென்கிறார்கள். ஒரு காலத்தில் அணைக் கட்டு என்பார்கள். இப்போது அணை கட்டுகிற பிரச்சினை சென்றுவிட்டது. தடுப்பணை கட்டுவதில்தான் பிரச்சினை. தடுப்பணை கட்டுவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கிறது என்பதுகூட என்னுடைய அனுபவத்திலே நான் கண்டிருக்கிற உண்மை. ஆகையினால், இதுகுறித்து தனியாக முதலமைச்சர் அவர்களிடம் நான் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை வழங்குகிறார்!

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அவசர செயற்குழு கூட்டம்!

மாவட்ட கழக பொறுப்பாளர் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 20-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அவசர செயற்குழு கூட்டம் நாளை (21-03-2025) அன்று வெள்ளிக் கிழமை காலை 10 மணி அளவில் கும்மிடிப் பூண்டியில். அமைந்துள்ள லீ-ராஜ் கோர்ட்யார்ட் ஹோட்டலில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் கும்மிடிப் பூண்டி சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில் நடைபெறுகிறது

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார்

இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இ.ஏ.பி. சிவாஜி, ஜெ.மூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் மு. கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், மாநில நிர்வாகிகள் சி.எச்.சேகர், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்பு வாணன், ஜி. ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதய சூரியன், ஏ.கே.சுரேஷ், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மு.மணி பாலன், கி.வே.ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந.பரிமளம், கா.சு. ஜெகதீசன், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு.தமிழ உதயன், உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் ;- தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டத்திற்கு அரசு சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை குறித்து மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து

இவ்வாறு அறிக்கையின் வாயிலாக மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தெரிவித்தார்.

பொ.து.ராஜா தலைமை! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

43(அ) வட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் பிறந்தநாள் பொதுக்கூட்டம் - நலஉதவிகள்!

தமிழன் பிரசன்னா சிறப்புரை! ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி பங்கேற்பு!

சென்னை, மார்ச்.20

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட திமுக சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (20.03.2025 வியாழக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஆதிதிராவிடர் சாலை, காலரா மருத்துவமனை அருகில் நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் பொ.து.ராஜா தலைமை வகிக்கிறார். ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.

பகுதி கழக செயலாளர்கள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், என்.மருதுகணேஷ், கே.வி.லோகேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், வெ.சு.சத்தியநாராயணன், வி.வி.ரமேஷ், சி.மணிகண்டன், ஏ.டி.மணி, எஸ்.கே.இளங்கோ, ஆ.ரமேஷ்பாபு, இர.பொன்இளவரசன், ஜெ.பிரேம்ஆனந்த், என்.எம்;கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப. குமார், ச.தமிழ்செல்வன், ஜே.ஜே.நெல்சன், பா.அருண்குமார், வி.அன்பரசு, ம.நல்லதம்பி, கே.குப்பன், எம்.அரிகிருஷ்ணன், ஆர்.ஜெயக்குமார், எஸ்.சிவக்குமார், ஜே.ஜே.பிராங்கிளின், எம்.ஷீலா மோகன், ஆர்.வேலுசாமி, ஆர்.சந்தோஷ், எம்.யுகநாதன், கே.ரீட்டா,

சா.திருப்பதிசாமி, வி.ஞானசேகர் தேவகி, நா.தமிழ்வாணன், என்.செல்வம், டி.வசுமதி, ஆர்.பாலசந்தர், டி.இரத்தினராஜ், வி.தமிழரசு, மா.லட்சுமிநாராயணன், ஆர்.ஆர்.ஆனந்தன், மு.பாலமுருகன், மு.டில்லிதுரை, எல்.ரமேஷ், மா.ஜெயச்சந்திரன், எஸ்.கலா, அ.சிவராஜ், எஸ்.முத்தமிழன், வி.சிவா, எம்.அருண்குமார், ஜெ.சிவக்குமார், ஜெ. விஜேஷ், டி.பன்னீர்செல்வம், ஏ. ஜான்போஸ்கோ, வண்ணை தேவகி ஷியாம், ஜி.யோகேஸ்வரன், மெய்.அன்புபிரகாஷ், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

இரா.மதிவாணன், தா.இளையஅருணா, ந.மனோகரன், டி.வி.முத்துகிருஷ்ணன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, க.நாகம்மை, வி.தயாளன், நேதாஜி யு.கணேசன் எம்.சி, கு.நற்குணம், ப.சோமசுந்தரமூர்த்தி, மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், திராவிடசெல்வி, பி.சீனிவாசன், எஸ்.எம்.பரசுராமன், எம்.விமலா, வை.கலைவாணன், லட்சுமிவேலு, ஆர்.மூர்த்தி, ப.ஆ.சண்முகம், எஸ்.பி.எஸ்.புத்தன், பி.சதிஷ்குமார், எஸ்.எல்.சுந்தர், கி.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, தேவி கதிரேசன் எம்.சி, குமாரி நாகராஜன் எம்.சி,

எம்.எம்.சாமி, ஆர்.ரமேஷ், ஜெ.சுரேஷ்பாபு, பி.அன்பழகன், வி.முத்து, கே.மோகன், டி.ஆர்.தணிகாச்சலம், பி.கே.மூர்த்தி, மா. ரூபசங்கர், வீ.வடிவேல், பா.நரேஷ்குமார், எஸ்.சம்பத், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

டி.ராமமூர்த்தி நன்றி கூறுகிறார்.

உலக முதலீட்டாளர் மாநாடு–2024

இரண்டாவது மாநில அளவிளான கண்காணிப்பு குழு கூட்டம்!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடந்தது!

சென்னை, மார்ச் 20-

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்களின் தலைமையில் நேற்று (19.03.2025) கிண்டி சிட்கோ தலைமை அலுவலக கூட்ட அரங்கில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்த இரண்டாவது மாநில அளவிளான கண்காணிப்பு குழு கூட்டம் நடைபெற்றது.

2024-ம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் 5068 குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ரூ.63,573 கோடி முதலீட்டை ஈர்க்கும் வகையிலும் ரூ.2.51 இலட்சம் புதிய வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டன. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்ளை நடைமுறைக்கு கொண்டு வருவதை கண்காணிக்கும் பொருட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தலைமையில் பல்வேறு உயர் அதிகாரிகளை உறுப்பினர்களாக கொண்ட மாநில அளவிளான கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது.

ஆய்வின்போது 2,327 நிறுவனங்கள் உற்பத்திகளை தொடங்கியதன் வாயிலாக குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.24,448 கோடி முதலீடுகள் செய்யப்பட்டு 89,579 புதிய வேலைவாப்புகள் உருவாக்கபட்டுள்ளன என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. இது புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட நிறுவனங்களின் எண்ணிக்கையில் 45.90 விழுக்காடு ஆகும். இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் அமைச்சர் அவர்கள் பல்வேறு துறைகளில் ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளுக்காக நிலுவையில் உள்ள மீதமுள்ள விண்ணப்பங்கள் மீது ஆய்வு மேற்கொண்டு விரைவாக ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகளை வழங்குமாறு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு கூடுதல் செயலர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல் ராஜ், மற்றும் பல்வேறு துறையின் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு

சென்னை மேற்கு மாவட்டம் நடத்தும் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

இன்று (20–03–2025 – வியாழக்கிழமை)
நடைபெறும் பொதுக் கூட்டங்கள் விபரம் வருமாறு:

வ. எண்	வட்டம் / அணி	தலைமை	இடம்	சொற்பொழிவாளர்கள்
1	119அ	லைனர் கே.பிரபு வட்டக் கழக செயலாளர்	வி.பி.ராமன் (இலாயிட்ஸ்) சாலை, வி.எம். தெரு சந்திப்பு	சைதை சாதிக் தலைமைக்கழக பேச்சாளர் செல்வி பார்கவி கமலநாதன் இளம் பேச்சாளர்

மேற்கண்ட நிகழ்வுகளில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர் / தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி/வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நே.சிற்றரசு
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

பெரம்பூர் வடக்குப் பகுதி – என் நந்தகோபால் ஏற்பாட்டில்

முதல்வர் பிறந்தநாள் விழா - நிதிநிலை அறிக்கை விளக்கப் பொதுக் கூட்டம்!

சுப.வீரபாண்டியன் சிறப்புரை – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்குகிறார்!

சென்னை, மார்ச். 20-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்ப வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதி என்.நந்தகோபால் ஏற்பாட்டில் கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக் கூட்டம் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகிறது.

நாள் 20.3.2025 மாலை 6 மணி, இடம்:பள்ளிச்சாலை, காந்தி சிலை அருகில்.

தலைமை என் நந்தகோபால் மாவட்ட பிரதிநிதி, பேராசிரியர் சுப.வீர பாண்டியன் அவர்கள் 2025 - 2026 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை பற்றி சிறப்புரை ஆற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள் , வட்ட செயலாளர்கள் , வட்ட நிர்வாகிகள், மாவட்ட பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்புகின்றனர் .

கைப்.சுரேஷ், போ.முகேஷ், ஜே.கே.உதயகுமார். நன்றி கூறுகிறார்.

பெரம்பூர் வடக்குப் பகுதி 37வது வட்டம் – எம்.சண்முகம் ஏற்பாட்டில்

முதல்வர் பிறந்தநாள் விழா - அறுசுவை உணவு, நல உதவிகள்!

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச். 20-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி 37வது வட்டம் வட்டக் கழக பொருளாளர் எம். சண்முகம் அவர்களின் ஏற்பாட்டில் கழகத் தலைவர் -முதல்வர் 72 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு நலத் திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறுகின்றது.

நாள் :21/03/2025 மதியம் ஒரு 1 மணி

இடம் : 2வது பிரதான சாலை எம்.கே.பி நகர்.

தலைமை: எம். சண்முகம் வட்ட கழக பொருளாளர்

முன்னிலை: அ. முருகன் க. ஜெயராமன் கே. இ. செந்தமிழ் அரசு எஸ். ஆர். கமலக்கண்ணன் ஏ ஜியாவுதீன் எம்.அருண் சக்கரவர்த்தி.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அறுசுவை உணவு வழங்குகிறார். மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி. சேகர் எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார் கன்னிகை ஜி.ஸ்டாலின் இரா.கருணாநிதி இரா.நரேந்திரன் ஏ. தமிழ்செல்வன் ப. மதிவாணன் டி. கமலக்கண்ணன் க. அமுல்.

வட்டச் செயலாளர்கள் சி. எஸ். ரவி மு. உமாபதி இரா.ஹரிதாஸ் கே. வி. ராஜன் என். கார்த்திபன்

வட்டக் கழக நிர்வாகிகள் : ஆர் விஸ்வநாதன் எம். ஆர். வேலு என். விக்டோரியா பி. குமார் கே. ஏழுமலை ஏ. விஜயகுமார் ஏ. ஜெயக்குமார் ஜி. விக்னேஷ் ஆர். மோகன் ஏழுமலை எம். சீனிவாசன் மற்றும் அணிகளின் அமைப்ப பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் கலந்து கொள்கின்றனர்.

வி. சிவகுமார் எஸ். பாலாஜி நன்றி கூறுகின்றனர்.